

# Financial Management



EXCELLENCE IN ACTION - VETRI TRUST, TUTICORIN

# நிதியியல் மேலாண்மை.

1) நிதியியல் மேலாண்மையில் உள்ள பல்வேறு முடிவெடுத்தலை சுருக்கமாக எழுதுக:-

நிதி மேலாண்மை:-

* நிதி மேலாண்மை என்பது நிறுவனத்தின் நிதி வளங்களை திறம்பட திட்டமிட்டு, கட்டுப்படுத்தி பயன்படுத்தும் செயல்முறையாகும்.

* நிறுவனத்தின் வளர்ச்சி, இலாபம், மற்றும் நீண்ட கால நிலைத்தன்மை ஆகியவற்றை உறுதிசெய்ய நிதி மேலாண்மையில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அவை யாவன,

i) முதலீட்டு முடிவு (Investment Decision)

ii) நிதி திரட்டும் முடிவு (Financing Decision)

iii) லாப பகிர்வு முடிவு. (Dividend Decision)

iv) வேலை மூலதன முடிவு. (working Capital Decision)

(i) முதலீட்டு முடிவு (Investment Decision):-

(i) நிறுவனத்தின் நிதியை எந்த சொத்துக்களில் முதலீடு செய்வது, என்பதை தீர்மானிக்கும் முதல் முடிவு இது.

இது நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் வருமானத்தை நேரடியாக பாதிக்கும்.

வகைகள்:

நிலையான சொத்துக்கள்: நிலம், கட்டிடம் இயந்திரங்கள்.

நடப்பு சொத்துக்கள்: பணம், சரக்கு, பெற வேண்டிய தொகை.

முக்கியத்துவம்:-

★ லாபத்தை அதிகரிக்க, அபாயத்தை குறைக்க, வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்த உதவுகிறது.

2) நிதி திரட்டும் முடிவு: (Financing Decision)

★ நிறுவனத்திற்கு தேவையான நிதியை எங்கு இருந்து பெறுவது என்பதை தீர்மானிக்கும் முடிவு.

★ சேமிக்கப்பட்ட லாபம், பங்குகள், கடன் பத்திரங்-கள், வங்கிக்கடன் போன்றவை.

3. லாப பகிர்வு முடிவு: (Dividend Decision)

★ லாப பகிர்வு முடிவு என்பது நிறுவனத்தின் லாபத்தை பங்குதாரர்களுக்கு பகிர்வதா (or) மீண்டும் நிறுவனத்தில் முதலீடு செய்வதா என்பதை தீர்மானிக்கும் முடிவாகும்.

★ இதனால் பங்குதாரர்களின் நம்பிக்கை உயரும். நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் உதவும்.

4) வேலை மூலதன முடிவு: (working Capital Decision)

★ வேலை மூலதன முடிவு என்பது நிறுவனத்-தின் தினசரி நடவடிக்கைகளுக்கான நிதி தேவைகளை நிர்வகிக்கும் முடிவாகும்.

உள்ளடக்கம்:

i) பண மேலாண்மை

ii) சரக்கு மேலாண்மை

iii) கடனாளிகள் மற்றும் பெற வேண்டிய தொகைகள்.

முக்கியத்துவம்: -

★ தினசரி செயல்பாடுகள் தடையின்றி நடை-பெறவும், நிதி சிக்கலையும் தவிர்க்கும்.

2) மூலதன அமைப்புக் கோட்பாட்டின் பழமையான கோட்பாட்டினை விளக்குக?

மூலதன கட்டமைப்பு:-

★ மூலதன கட்டமைப்பு என்பது ஒரு நிறுவனத்தின் நீண்ட கால நிதி ஆதாரங்களான பங்கு மூலதனம், முன்னுரிமை பங்குகள், கடன் பத்திரங்கள் மற்றும் வங்கி கடன்கள் ஆகியவற்றின் கலவையை குறிக்கிறது. இதன் முக்கிய கருத்துக்களில் ஒன்றாக பாரம்பரிய அணுகுமுறை காணப்படுகிறது.

பாரம்பரிய அணுகுமுறை:-

★ பாரம்பரிய அணுகுமுறைப்படி கடன் மற்றும் பங்கு மூலதனத்தின் சரியான கலவை மூலம் நிறுவனத்தின் மொத்த மூலதனச் செலவை குறைத்து, நிறுவனத்தின் மதிப்பை அதிகரிக்க முடியும்.

இதன் முக்கிய கருத்துக்கள்:-

i) கடன் மூலதனம், பங்கு மூலதனத்தை விட குறைந்த செலவு கொண்டது.

ii) ஆரம்ப நிலையில் கடன் அதிகரிக்கும் போது, மொத்த மூலதனச் செலவு குறையும்.

iii) கடன் அளவு அதிகரித்தால், நிதி ஆபத்து அதிகரிக்கும்

★ ஆபத்து அதிகரிப்பதால், பங்குதாரர்கள் அதிக வருமானத்தை எதிர்பார்ப்பர்.

★ ஒரு கட்டத்திற்கு மேல் கடன் அதிகரித்தால மொத்த மூலதனச் செலவு உயரத் தொடங்கும்.

பாரம்பரிய அணுகுமுறையின் நிலைகள்:

i) ஆரம்ப நிலை (Low leverage stage)

★ கடன் அளவு அதிகமாகவும், கடன் செலவு குறைவாகவும் இருக்கும்.

★ மொத்த மூலதனச் செலவு குறையத் தொடங்கும். நிறுவனத்தின் மதிப்பு அதிகரிக்கும்.

2) மிதமான நிலை: (Moderate leverage stage).


★ கடன் மற்றும் பங்கு மூலதனத்தின் சமநிலை இருக்கும்.

★ மொத்த மூலதனச் செலவு மிகக் குறைவாக இருக்கும். நிறுவனத்தின் மதிப்பு மிக அதிகமாக இருக்கும்.

3. அதிக கடன் நிலை: (High Leverage stage)

★ கடன் அளவும், நிதி ஆபத்தும் அதிகரிக்கும். கடன் செலவும், பங்கு செலவும் உயர்கிறது. நிறுவனத்தின் மதிப்பு குறையத் தொடங்கும்.

வரைபட விளக்கம்: (Diagram)




★ கடன் அதிகரிக்கும் போது, மொத்த மூலதனச் செலவு முதலில் குறையும்.

★ குறிப்பிட்ட அளவிற்கு பிறகு, மீண்டும் அதிகரிக்கும். இதனால் வரைபடம் U வடிவமாக காணப்படும்.

பாரம்பரிய அணுகுமுறையின் முக்கியத்துவம்:-

★ சிறந்த மூலதனக் கட்டமைப்பைக் கண்டறிய உதவுகிறது.

★ நிறுவனத்தின் மதிப்பை அதிகரிக்க உதவுகிறது.
நிதி ஆபத்தை கட்டுப்படுத்துவதில், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உயர்த்துகிறது.

குறைபாடுகள்:

★ ஆபத்தை அளவிடுவது கடினம்
சந்தை நிலைகள் எப்போதும் ஒரே மாதிரி இருக்காது.

★ அனைத்து நிறுவனங்களுக்கும் பொருந்தாது.

3) மூலதனத் திட்டமிடல் முடிவுகளை எடுக்கும் போது கவனிக்க வேண்டிய காரணிகள் யாவை?

மூலதன பட்ஜெட்:-

★ மூலதன பட்ஜெட் என்பது நிறுவனத்தின் நீண்ட கால முதலீட்டு திட்டங்களை தேர்வு செய்யும் செயல்முறையாகும்.

★ இந்த முடிவுகள் நிறுவனத்தின் லாபம், வளர்ச்சி மற்றும் நிதி நிலைத்தன்மையை நீண்ட காலத்தில் பாதிக்கின்றன.

★ எனவே மூலதன பட்ஜெட் முடிவுகளை எடுக்கும்போது சில காரணிகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

முதலீட்டின் செலவு: (Cost of Investment)

★ திட்டத்தை தொடங்க தேவையான ஆரம்ப செலவு. இயந்திரங்கள், கட்டிடம், நிறுவல் செலவுகள் போன்றவை அதிக செலவுள்ள திட்டங்கள் அதிக கவனத்துடன் தேர்வு செய்யப்பட வேண்டும்.

எதிர்பார்க்கப்படும் வருமானம்: (Expected Return)

★ திட்டத்திலிருந்து எதிர்காலத்தில் கிடைக்கும் வருமானம். வருமானம் அதிகமாக இருக்கும் திட்டங்கள் முன்னுரிமை பெறும்.

**பணப்புழக்கம்: (Cash flows)**

- ★ திட்டத்தால் ஏற்படும் பணவரவு மற்றும் பண வெளியேற்றம்.
- ★ சரியான பணப்புழக்க மதிப்பீடு முதலீட்டில் முக்கியமானது.

**திட்டக்காலம்:- (Life of the project)**

- ★ திட்டம் எவ்வளவு காலம் செயல்படும் என்பது. நீண்ட கால திட்டங்களில் அதிக ஆபத்து இருக்கலாம்.

**மூலதனத்தின் செலவு: (cost of capital)**

- ★ முதலீட்டிற்கு பயன்படுத்தப்படும் நிதியின் செலவு.
- ★ திட்ட வருமானம், மூலதனச் செலவைக் காட்டிலும் அதிகமாக இருக்க வேண்டும்.

**ஆபத்து மற்றும் நிச்சயமின்மை: (Risk and uncertainty)**

- ★ எதிர்கால வருமானம் உறுதி இல்லாதது.
- ★ அதிக ஆபத்து உள்ள திட்டங்கள் கவனமாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

**திரவத்தன்மை:- (Liquidity)**

- ★ முதலீடு நிறுவனத்தின் குறுகிய கால பண தேவைகளை பாதிக்குமா என்பதே.
- ★ திரவத்தன்மை குறையக் கூடாது.

நிதி கிடைப்புத் தன்மை: (Availability of funds)

★ தேவையான நிதி எளிதாக கிடைக்குமா என்பது.

★ நிதி பற்றாக்குறை முதலீட்டை பாதிக்கும்.

தொழில் நுட்ப மாற்றங்கள்: (Technological changes)

★ தொழில் நுட்பம் விரைவாக மாறுவதால் திட்டம் பழமையாக மாறும் அபாயம்.

அரசாங்க கொள்கைகள்: (Government policies)

★ வரி கொள்கை, மானியங்கள், சட்டங்கள் போன்றவை.

★ அரசாங்க ஆதரவு உள்ள திட்டங்கள் சாதகமானவை.

பொருளாதார நிலை: (Economic conditions)

★ பணவீக்கம், வட்டி விகிதம், சந்தை நிலை.

★ பொருளாதார மந்தநிலை முதலீட்டை குறைக்கலாம்.

மேலாண்மைத் திறன்: (Managerial ability)

★ திட்டத்தை திறம்பட செயல்படுத்தும் மேலாண்மைத் திறன்.

★ சரியான மூலதன பட்ஜெட் மற்றும் மேலாண்மைத் திறன் நிறுவனத்தின் அதிக லாபம், வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை வழங்கும்.

4) முன்னுரிமைப் பங்குகள் என்றால் என்ன? அவை சாதாரண பங்குகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றன?

★ ஒரு நிறுவனத்தின் மூலதனம் பலவகை பங்குகள் மூலம் திரட்டப்படுகிறது. அவற்றில் முக்கியமானவை. முன்னுரிமை பங்குகள் மற்றும் இக்விட்டி பங்குகள். இவ்விரு பங்குகளும் நிறுவனத்தின் நிதி அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

முன்னுரிமைப் பங்குகள்:

☆ முன்னுரிமைப் பங்குகள் என்பது நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களுக்கு சில முன்னுரிமை உரிமைகள் வழங்கும் பங்குகளாகும். முன்னுரிமை பங்குதாரர்கள் இரண்டு உரிமைகளைப் பெறுகின்றனர்.

1) நிரந்தர விகிதத்தில் லாபம்

2) நிறுவனம் கலைக்கப்படும் போது, மூலதனம் திருப்பிச் செலுத்தப்படுவதில் முன்னுரிமை.

ஆனால் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு பொதுவாக வாக்குரிமை இல்லை. இவர்கள் நிறுவன மேலாண்மையின் நேரடி பங்கு பெறமாட்டார்கள்.

## முன்னுரிமை பங்குகளின் வகைகள் :

* கூட்டு முன்னுரிமைப் பங்குகள்
* கூட்டற்ற முன்னுரிமை பங்குகள்
* மாற்றக்கூடிய முன்னுரிமை பங்குகள்
* மாற்ற முடியாத முன்னுரிமை பங்குகள்
* மீட்கக்கூடிய முன்னுரிமை பங்குகள்.

## இக்விட்டி பங்குகள் :

* இக்விட்டி பங்குகள் என்பது நிறுவனத்தின் உண்மையான உரிமையை பிரதிபலிக்கும் பங்குகளாகும். இக்விட்டி பங்குதாரர்கள் நிறுவனத்தின் உரிமையாளர்களாக கருதப்படுகிறார்கள்.

## இக்விட்டி பங்குகளின் முக்கிய அம்சங்கள் :

* லாபம் நிரந்தரமாக இருக்காது.
* லாபம் அதிகமாகவும், குறைவாகவும் இருக்கலாம்.
* இக்விட்டி பங்குதாரர்களுக்கு வாக்குரிமை உள்ளது.
* அதிக ஆபத்தும், அதிக லாப வாய்ப்பும் உள்ளது.

## இக்விட்டி பங்குகளின் நன்மைகள் :

i) நிறுவனத்திற்கு நிரந்தர லாப கட்டாயம் இல்லை.

ii) மேலாண்மை கட்டுப்பாடு, நிறுவன வளர்ச்சியில் பங்கு பெறலாம்.

| முன்னுரிமை பங்குகள் | இக்விட்டி பங்குகள் |
| --- | --- |
| பகுதி உரிமையாளர்கள் | நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள் |
| நிரந்தர லாப விகிதம் | லாப விகிதம் நிரந்தரம் இல்லை, மாறுபடும். |
| லாபம் இருந்தால் முதலில் | லாபம் இருந்தால் மட்டும். |
| லாபத்தில் முன்னுரிமை உண்டு | லாபத்தில் முன்னுரிமை இல்லை. |
| மூலதனத்தை முன்னுரிமையுடன் திருப்பச் செலுத்துதல். | மூலதனத்தை கடைசியில் திருப்பச் செலுத்துதல். |
| பொதுவாக வாக்குரிமை இல்லை. | பொதுவாக வாக்குரிமை உண்டு. |
| மேலாண்மை கட்டுப்பாடு இல்லை | மேலாண்மையில் பங்கு உள்ளது. |
| ஆபத்து மற்றும் லாப வாய்ப்பு குறைவு | ஆபத்து மற்றும் லாப வாய்ப்பு அதிகம். |
| முதலீட்டு பாதுகாப்பு அதிகம். | முதலீட்டு பாதுகாப்பு குறைவு. |
| நிறுவனம் கலைக்கப்பட்டால் முதலில் பணம் பெறுவர் | நிறுவனம் கலைக்கப்பட்டால் கடைசியில் பணம் பெறுவர். |

## 3) ரொக்க இருப்பு வைத்திருப்பதின் நோக்கங்களை விளக்குக:-

* பணம் என்பது நிறுவனத்தின் மிக முக்கியமான திரவச்சொத்து ஆகும். நிறுவனத்தின் தினசரி நடவடிக்கைகள், அவசர தேவைகள் மற்றும் எதிர்கால திட்டங்களை நிறைவேற்ற போதுமான அளவு பணம் வைத்திருப்பது அவசியம்.

* பணம் வைத்திருப்பதற்கான முக்கிய தூண்டுதல்கள் குறித்து பொருளாதார அறிஞர் J.M. Keynes விளக்கியுள்ளார்.

### பணம் வைத்திருப்பதற்கான முக்கிய தூண்டுதல்கள்:-

### பரிவர்த்தனை தூண்டுதல் :(Transaction Motive)

* பரிவர்த்தனை தூண்டுதல் என்பது நிறுவனத்தின் தினசரி வணிகச் செலவுகளை மேற்கொள்ள பணம் வைத்திருப்பதாகும்.

* உதாரணமாக ஊதியம் மற்றும் சம்பளம் செலுத்துதல், மூலப்பொருள்கள் கொள்முதல், வாடகை, மின்சாரம், வரி செலுத்துதல் போன்றவை.

* இதனால் வணிக நடவடிக்கைகள் தடையின்றி நடைபெறும். இது மிக முக்கியமான மற்றும் அடிப்படை தூண்டுதல் ஆகும்.

## முன்னெச்சரிக்கை தூண்டுதல் : (Precautionary Motive)

★ முன்னெச்சரிக்கை தூண்டுதல் என்பது எதிர்பாராத செலவுகள் மற்றும் அவசர நிலைகளை சமாளிக்க பணம் வைத்திருப்பதாகும்.

உதாரணமாக திடீர் இயந்திர பழுது, விற்பனை குறைவு. போன்றவை.

## ஊகத் தூண்டுதல் : (Speculative Motive)

★ ஊகத் தூண்டுதல் என்பது எதிர்கால முதலீட்டு வாய்ப்புகளை பயன்படுத்த பணம் வைத்திருப்பதாகும்.

உதாரணமாக வட்டிவிகிதம் குறையும் போது பத்திரங்கள் வாங்குதல், குறைந்த விலையில் சொத்துகள் வாங்குதல் .போன்றவை.

இதனால் அதிக லாபம் ஈட்டும் வாய்ப்பை வழங்குகிறது. நிறுவனத்தின் முதலீட்டு திறனை உயர்த்துகிறது.

## ஈடு செய்யும் தூண்டுதல் : (Compensating Motive)

★ இந்த தூண்டுதல் என்பது வங்கிகளுடன் உள்ள ஒப்பந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்ய பணம் வைத்திருப்பதாகும்.

★ வங்கிகள் கடன் மற்றும் ஓவர்டிராஃப்ட் வசதிகளை வழங்குவதற்காக குறைந்தபட்ச இருப்பை வைத்திருக்க வலியுறுத்தும்.

## எதிர்கால தேவைகளை தூண்டுதல் :-

★ (Future Requirement Motive)

எதிர்கால முதலீடுகள் மற்றும் திட்டங்களை நிறைவேற்ற பணம் வைத்திருப்பதே இத்தூண்டுதல்.

உதாரணமாக புதிய இயந்திரங்கள் வாங்குதல், விரிவாக்கத் திட்டங்கள், மற்றும் புதிய தயாரிப்புகள் போன்றவை இதில் அடங்கும்.

## நிதி நெகிழ்வுத் தூண்டுதல் :-

★ (Financial Flexibility Motive)

சந்தை மற்றும் பொருளாதார மாற்றங்களை உடனடியாக எதிர்கொள்ள பணம் வைத்திருத்தல்.

## முக்கியத்துவம் :-

★ நிதி சமாதானம் கிடைக்கும்.

நெருக்கடி காலங்களில் நிதிகளில் நிலைத்தன்மை வழங்கும்.

—x —x —x —x —x